# திருக்குறளும் ஒழுக்கமும்

**வே. இராமகிருஷ்ணன்**

காலத்திற்குக் காலம் சூழல் மாறுவது வரலாறு காட்டும் உண்மை என்பர். காலஞ் செல்லச் செல்லச் சூழல் மாறுவது நியதி என்பதல்ல இதன் பொருள். சூழல் மாறுவதினாலேயே வரலாற்றுக் காலகட்டங்களென வகுக்கிறோம். கால உணர்வு அவ்வாறே தோன்றுகிறது. நிகழும் சம்பவங்கள் வாயிலாகவே முன்னது பின்னது எனும் உணர்வு எழும்.

இன்னொரு கோணத்திலிருந்து அனுபவ ஆய்வினை அணுகும் போது காலம் (Time), வெளி (Space) எனும் ஒழுங்குமுறையை முற்கற்பிதமாகக் கொண்டாலன்றி அனுபவத்திற்கே இடமில்லையெனக் கருதப்படுகின்றது. ''நேற்றுக் காலை பண்ணைப் பாலத்தில் குண்டு வெடித்தது'' என்று கூறும்போது குண்டு வெடித்தது என்பது மட்டுமே நிகழ்ந்த சம்பவம். எப்போது, எங்கே யெனும் கேள்விகளுக்கு விடை தேடுமுகமாக ''நேற்றுக் காலை'', ''பண்ணைப் பாலத்தில்'' எனும் தரவுகள் எழுந்து குண்டுவெடித்த சம்பவத்தைச் சற்றுத் தெளிவாக விளக்குகின்றன. யாரால், எவ்வாறு எனும் வினாக்களும் எழுந்தால் சாதாரண அல்லது விஞ்ஞான ரீதியான ஆய்வும் முழுமை பெற்று விடும் எனக் கொள்ளலாம்.

இவையாவும் ஏன் எனும் விசாரணைக்குப் போதாதென்றே கூற வேண்டும். யாரால் அல்லது யார் நிமித்தம் என்பதும் ஏன் என்பதும் வெவ்வேறு அறிவு அளவைகளைக் கொண்டவை. சமூக வாழ்க்கையில் அரசாட்சியின் சட்ட ஒழுங்கிற்கும் அறம் நிலைநாட்ட முயலும் ஒழுங்கிற்கும் முற்கூறிய ஆய்வோடு 'ஏன்' எனும் விசாரணையும் அவசியமாகின்றது.

உடலால் வாக்கால் ஆற்றும் செயல்களோடு மனதால் எத்தனித்தலும் கருமங்களைச் சார்ந்ததாகும். இவற்றுள் மனதாற் செய்வனவற்றையே குறள் மூலமாகக் கொள்கின்றது. மனம் மாசுடையதாகில், ஏனையவை வெறும் சொல்லும் வேடமும் ஆகும் எனப்படுகின்றது.[1]

'எங்கே', 'எப்போது', 'யாரால்', 'எவ்வாறு' எனும் விசாரணையால் - அதாவது விஞ்ஞான ஆய்வினால் (வரலாற்று விசாரணையுட்பட) ஒழுக்க ரீதியான உண்மைகளையறியமுடியாதென்பதே உட்கிடை.

இவை விவரிக்கும் பணி யாற்றுவனவேயன்றி நியம விடயங்களைத் தரவல்லன வல்ல.

விஞ்ஞான ரீதியான ஆய்வு எவை எவ்வாறு இருக்கின்றன என்று கூறவல்லனவே யன்றி அவை எவ்வாறு இருத்தல் வேண்டும் என நெறிப் படுத்தக் கூடியனவல்ல. நிச்சயந் தேடலே விஞ்ஞானத்தின் இலட் சியமாக இருப்பதால் முடிந்த முடிவுக்கு அங்கு இடமில்லை. அவ் வாறு அனுமானித்த ஒழுக்க முறைகளும் சார்புடையன வாகவேயிருக்கும் சூழலுக்கேற்ப அது அவர்களுக்கும், இது இவர்களுக் கும் என ஒழுக்க வேறுபாடுகளே நியாயமானதென விளக்க முயலும். சமூக வாழ்க்கைக்குரிய நெறிகள் அச்சுறுத்தலினால் திணிக்கப்பட்ட சட்டங்களாகவோ, கட்டளைகளாகவோ அல்லது வெறுமனே நிச்சயத் தன்மையற்ற (மூட) நம்பிக்கைகளாகவோ தென்படும். இதனால் மனித உறவுகளும் மனதைத் தொடும் கட்டுப்பாட்டிற்கு உட்படாது வெறுமனே வேடமாக மாறுவது சகஜமாகின்றது.

விஞ்ஞான ஆய்வினால் ஒழுக்க ரீதியான உண்மைகளையடைய முடியாது என்பது, சில நவீன மேல்நாட்டுச் சிந்தனையாளர் மத்தி யில் தத்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. எமது உரையாடல்களில் விஞ் ஞானம் கூறும் உண்மைகளும் நியமங்களும் கலந்துள்ளதை மறுக்க முடியாத நிலை. இவையிரண்டும் வெவ்வேறு உரையாடல் விதிகளுக்கு உட்பட்டவை எனும் முடிவுக்கு வந்தனர். காலம், வெளி, காரண காரியத் தொடர்பு ஆகிய அனுகுமுறைகளைக் கொண்டு பொறிகள் வாயிலாய் பெறும் தரவுகளைப் பொது விதிகளுக்கு அமைவித்தல் ஒரு துறையென்றும் இதற்கு வேறாக ஒழுக்க நியமங்களை உள்ளுணர் வால் அறியலாம் என்றும் இமானுவல் காண்ட் வகுத்துக்கொண்டது மேல்நாட்டு சிந்தனையாளர் மரபில் முன்னோடியாக அமைந்துள்ளது. இவ்விரண்டையும் ஒருங்கு இணைக்கமுடியாத நிலை பல மனக் கோளாறுகளையும் சிந்தனையாளர் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது.

இந்திய மெய்யியல் மரபில் இத்தத்தளிப்பு ஏற்படுவதற்கு இட மில்லை. வாழ்க்கை அனுபவங்களின் ஆய்வு ஒருங்கிணைந்த பௌதிக வதீதக் கொள்கையைப் பின்னணியாகக் (Metaphysical background) கொண்டுள்ளதே இதன் இரகசியம். திருவள்ளுவர் கூறும் கருத்துக் களும் இப்பின்னணியைச் சார்ந்தவை.

அநாதியாகவே தம்முள் இசைவுடன் பின்னிப் பிணைந்த நிலையில் இருந்த முக்குணங்கள் பிரிந்து வேறுபடவே சிருஷ்டி ஏற்பட்டது. பிரகிருதியிலிருந்து பிரபஞ்சம் பரிணமித்தது இவ்வாறு

என்பதே சாங்கிய தத்துவத்தின் விளக்கம். காலமும் பஞ்ச பூதங்களில் ஒன்றாகிய வெளியும் (ஆகாசம்) பரிணாம வளர்ச்சியின் வெவ்வேறு கட்டங்களினால் உருவானவை. (''காலந் தோன்றிய காலம் எது'' எனவும் ''வெளி எவ்வித வெளியில் தோன்றிற்று'' எனவும் விசாரிப்பது ஒழுக்க ஞானத்திற்குத் தேவைப்பட்டவையல்ல என்பது இஞ்ஞானிகளது முடிவு.) புருடனது ஈடேற்றத்திற்காகவே பிரகிருதி உலகாகப் பரிணமிக்கின்றது என்பர். சட உலகே தானென்றது சாட்சி நிலையை அடைவதே விடுதலையாகும் என்பது இத்தரிசனத்தின் விளக்கம். இது ஒருவகைத் துறவு. யோக மார்க்கமே இதனைச் சாதிக்கும் வழி.

பிரகிருதியைவிட மூலமானது மாயை என்பர் சைவசித்தாந்திகள். மண்ணினின்றும் செய்த குடத்தைப் போன்று இறைவன் நிமித்த காரணனாகி நின்று தன் சக்தியால் உலகைப் படைத்தான் என்பர். சாங்கியத்தைப் போன்று இங்கும் காலமும் வெளியும் படைப்புக்கு உட்பட்டது. படைப்பும் ஆன்மா வீடுபேற்றை அடைவதற்காகையால், தனு, கரண, புவன, போகங்கள் வெறுமனே நிகழ்ச்சிகளல்ல. அரியதோர் சந்தர்ப்பமாகக் கருதப்படுகின்றது. உலகும் ஓர் செயல் அரங்காக மாறுகின்றது.

இந்திய தரிசனங்கங்களுக்கு மூலமாகவுள்ள சாங்கியமும் அதனை ஒத்த சைவசித்தாந்தமும் வாழ்க்கைக்கு இவ்வாறே பொருள் வழங்குகின்றன. சம்பவங்களுக்குப் பின்பே கால உணர்வு எனக் கூறும் பௌத்தமும் துறவை வலியுறுத்துவதனால் நிலையற்றதை நிலையாகக் கருதுவது கேடு விளைவிக்கக்கூடியது எனக் கூறும். இவை யாவற்றுக்கும் பொதுவாகவுள்ள முற்கற்பிதங்களைக் குறள் வாயிலாகவும் காணலாம்.

பொருளாதாரத் துறையில் ஏற்படும் மனித உறவுகளும் (அரசியல் உட்பட) தமக்கிடையே கொண்ட உறவுகளினால் ஏற்படும் இன்பமும் அறத்திற்கு உட்பட்டதாகவும் வீடு பேற்றைப் பயக்கத்தக்கதாகவும் இருக்கின்றன. செல்வம் ஈனும். ஆனால், இதற்கு மேலால் சிறப்பு ஈனும். ஆகவே அறத்ினூா உங்கு ஆக்கம் எவனோ உயிர்க்கு என்பார் திருவள்ளுவர். அறத்தினைச் செய்யுமாறு மாந்தர்களை வற்புறுத்தும்போது அதன் இயல்பும் பயனும் செய்யத் தவறுவதனால் ஏற்படும் கேடும் வலியுறுத்தப்படுகின்றது. இவை யாவும் புற உலகை விஞ்ஞானரீதியாக ஆய்வதினால் அடையலாமென முடியாது 'முடியாது' என்பது மட்டுமல்ல. அழுக்காறு, அவா வெகுளி, இன்னாச்சொல் என்பவை இழுக்கா என்பதற்கும் உறுதியில்லை.

இதனை உணர்த்தவே பாயிரத்துள் நீத்தார் பெருமை கூறப்படுகின்றது. அவர்களே உள்ளவாறு உணர்த்த வல்லவர்கள். ஆகவே, சமூக நியமங்களை இன்னதெனக் கூறவல்லவர்கள் துறவிகளாவர்.

துறவிகளே சமூகத்தில் தலைவர்கள். ஏனெனில் அவர்களே உள்ளவாறு உணரவல்லவர்கள். அவர்களே மற்றவர்களுக்கு உணர்த்தவும் வல்லவர்கள். அவர்களுக்கே இரு துறைகளையும் இணைக்கும் திறமையுண்டு. விஞ்ஞானம் கூறும் உண்மைகள், ஒழுக்க நியமங்கள் என இரண்டு துறைகளையும் வேறு படுத்த வேண்டிய அவசியமில்லை. காலத்தால் வெளியால் (இடம், கலாச்சார சூழல் முதலியவை) அப்பாற்பட்டவற்றை உணரக்கூடியவர்கள். இவ்விரு ஒழுங்கு முறைகளுக்குள் சிக்குண்டவருக்கு அறனை உணர்த்தவல்லவருங்கூட.

மறுபுறத்தில் துறவியிடம் கடவுள் பக்தி இருத்தல் வேண்டும்.[3] இங்கும் இந்திய தரிசனங்களுக்குப் பொதுவாக இருக்கும் தன்மையினை அவதானிக்கலாம். பக்தி மார்க்கம் குறிக்கும் ஈஸ்வரனாக இருந்தாலும் சரி, யோக மார்க்கம் கூறும் முதல்வனாக இருந்தாலும் சரி, இரு நியாயங்களுக்கும் பொருந்தக் கூடியதாகவுளது. உயிர்களுக்கு (உலகு) 'இயற்கை உணர்வால் முற்றுமுணர்தல்'' தன்மையுள்ளவனே முதல்வனான் என்றும், அவன் வாலறிவன்' என்றும் 'மலர் மிசை ஏகினான்' என்றும் 'வேண்டுதல் வேண்டாமையிலான்' என்றும் 'இருள் சேர் இரு வினையும் சேரா இறைவன்' என்றும் 'பொறிவாயில் ஐந்தவித்தான் என்றும் ஆகவே 'தனக்குவமை இல்லாதான்' என்றும் 'அறவாழி அந்தணன் என்றும் 'எண்குணத்தான்' என்றும் கூறப்படுபவனே அறனைப் பொறுத்த மட்டில் நெறிப் படுத்துபவனாகின்றான். அவனையடைந்து அவன் சாயலைப் பெறுவதே அறவாழ்க்கையில் இடையறாது நிற்பதற்கு உறுதுணையாகும்.

சங்கர வேதாந்தம் கூறும் வியவகாரிக உலகும் பரமார்த்த உலகும் இணைந்த நிலையை இங்கு காணலாம். உலகு படைக்கப்பட்டதாகக் கருதினாலும் அல்ல என்றும் உளது எனக்கொண்டாலும், வாழ்க்கை அர்த்தமுள்ளதாக இருப்பதற்கே குறள் வழிகாட்டுகின்றது எனலாம். பகுப்பாய்வு செய்வோர் உரையாடல் உலகு என வகைப்படுத்தும் முயற்சி தேவைப்படுவதில்லை அன்றாட வாழ்க்கை (பொருளும் இன்பமும்) அறத்திற்கு உட்பட, அறத்தினால் சிறப்பும் (வீடு – அவ்வுலகு) செல்வமும் (பொருள் - இவ்வுலகு) பெறலாம் என்று கூறப்படுகின்றது. இதற்குத் துறவும் (நீத்தல்) முதல்வன் அருளும் தேவை என்பது சாதனை முறையினை சுட்டுகின்றது. அற நூல் குறிக்கும் கூற்றுக்களுக்கும் பொருள் கொள்வதும் அவ்வாறே 'கால' 'தேச' எல்லைகளுக்கு அப்பாற் பட்டதாகையால் ஒழுக்கக் கோட்பாடுகள் எங்கும் என்றும் பொருந்தும் எனவும் கொள்ளலாம்.

## குறிப்பு

1. மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
   ஆகுல நீர பிற

   (திருக்குறள்)

2. 'ஆதி பகவன்' என்பது வைதிகம் கூறும் ஈஸ்வரனையா அல்லது சமணம் கூறும் முதல் அல்லது ஆதி தீர்த்தங்கரரையா என்பதே சர்ச்சைக்குரியது. பின்னையது தாம் நாதனைக் கருதுவாரது கருத்துக்களை முதன்மையுடையது எனும் முடிவுக்கு இழுத்துச் செல்லும்.

3. அறம் — தருமம், ஆழி சக்கரம், தருமச் சக்கரம் என்றதும் பௌத்தர்களும் ஏற்கக் கூடிய அறநெறியென்றும் உரை சொல்ல இடமுண்டு.